பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 26 திங்கட்கிழமை 11.08.2025 கதிர் 275

## இது ரகசியம் அல்ல!

கடந்த காலங்களில் அரசியல்வாதிகள்மோசடிசெய்துமக்கள் பணத்தைக் கொள்ளையடித்தார்கள் என்பது ஒன்றும் இரகசிமான விடயமல்ல. ஆனால் அது ☞2

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் மீட்ட சான்றுப் பொருள்களை அடையாளம் காண உதவுக

### காணாமற்போனோருக்கான அலுவலகம் வேண்டுகோள்

முல்லைத்தீவு மாவட்ட கொக்குத் தொடுவாய் மனித புதகுழியில் கண்டுபிடிக்கப்பட்ட சான்று பொருட்களை அடையாளம் காண உதவுமாறு காணாமல் போனோருக்கான அலுவலகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தற்பரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வழக்கு இல: AR/804/23 முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் பிரதேசத்தில் உள்ள மனித புதைகுழி குறித்த விசாரணை முல்லைத்தீவு நீதவான் முன்னிலையில் நடத்தப்பட்டு வருகின்றது.

முதற்கட்ட தொல்பொருள் பகுப்பாய்வுகள் இந்த புதைகுழி 1994-1996 காலகட்டத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் என கூறுகிறது.

காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ☞2

## செப்டெம்பரில் அரசுத் தலைவர் ஜப்பான், அமெரிக்கா பயணம்

அரசுத் தலைவர் அநுரகுமார எதிர்வரும் செப்டெம்பர் மாதம் அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு உத்தியோகபூர்வஅரசுமுறைபயணம்மேற்கொள்ளவுள்ளார்.

அதற்கமைய அரசுத் தலைவர் முதலாவதாக அமெரிக்காவில் நிவ்யோர்க்கில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் பொதுச்சபை கூட்டத்தில் கலந்துக் கொள்ளவுள்ளதுடன்,அதனைத் தொடர்ந்து ஜப்பானுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தில் ஈடுபடவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபை கூட்டத்தில் கலந்துக் கொள்வதற்காக அரசுத் தலைவர் அநுரகுமார ☞2

## சமஷ்டி தீர்வை வலியுறுத்தி திரியாயில் நேற்று போராட்டம்



வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவினால் நடைமுறைப்படுத்தப்படும் 100 நாள் செயன்முனைவின் 10 ஆவது நாள் நிகழ்வு நிகழ்வு நேற்று திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பிரதேசத்திற்குட்பட்ட திரியாய் கிராமத்தில் இடம்பெற்றது.

பல வழிகளிலும் போரால் பாதிக்கப்பட்ட திரியாய் மக்கள் தொடர்ந்தும் நில அபகரிப்புக்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

ஞாயிற்றுக்கிழமை கூடிய மக்கள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு ☞2

## இராணுவ இருப்பைக் கண்டித்து

# வடக்கு கிழக்கில் ஓகஸ்ட் 15 முழு கடையடைப்பு போராட்டம்

### தமிழ் அரசுக் கட்சி அறிவிப்பு; அனைவருக்கும் அழைப்பு

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினர் தொடர்ச்சியாக குடிக்கொண்டுள்ளதால் ஏற்படும் பாதிப்பை மிக வன்மையாக கண்டிக்கிறோம். இராணுவ பிரசன்னத்துக்கு பெரும் எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் ஓகஸ்ட் 15 வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முழுமையான கடையடைப்பு இடம்பெறவேண்டும். எமது மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் மற்றும் அநீதிகளை கருத்திற்கொண்டு வர்த்தகர்கள் அன்றைய தினம் தமது கடைகளை முழுமையாக அடைத்துஎதிர்ப்பைவெளிப்படுத்தவேண்டும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.**

**கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து கடையடைப்புப் போராட்டம் குறித்து கட்சியின் செயலாளர் சுமந்திரன் தெரிவித்ததாவது:**

**முல்லைத்தீவு முத்துஐயன்கட்டு** ☞2

## பொலிஸ் அலுவலர் மீது நடவடிக்கை எடுங்கள் இல்லையேல் திரண்டு ஆர்ப்பாட்டம் செய்வோம்

### ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலைய அதிகாரியிடம் எம்.பி. முறைப்பாடு

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் ஒருவர் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் வலியுறுத்தி உள்ளார். குறித்த பொலிஸ் அலுவலர் தம்மோடு அடாவடித்தனமாகச் செயற்படுகிறார் என்று மக்களால் நாடாளுமன்ற உறுப்பினருக்குத் தெரியப்படுத்தியிருந்ததை அவடுத்து அவர் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கத் தவறினால் எதிர்வரும் சனிக்கிழமை (ஓகஸ்ட் 16) ☞2

## இராணுவ இருப்பை நீக்குமாறு கோரி அரசுத் தலைவருக்கு அவசரக் கடிதம்

### தமிழ் அரசுக் கட்சி அனுப்பியது

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தின் அதிகப்படியான இருப்பை உடனடியாக தடுக்க உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் முத்து ஐயன்கட்டு இளைஞனின் உயிரிழப்பு தொடர்பில் நீதிக்கான செயல்முறை தலையீடின்றி மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்யுமாறும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி அரசுத் தலைவர் அநுரகுமாரவிடம் எழுத்து மூலமாக வலியுறுத்தியுள்ளது.

இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்ட இளைஞன் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் அரசுத் ☞2

## அரசியல் கைதிகள் விடுவிப்பை வலியுறுத்தி அராலியில் நேற்று 'விடுதலை நீர்' சேகரிப்பு

நெடுங்காலமாக சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நேற்று அராலி முத்தமிழ் சன சமூக நிலையத்தில் விடுதலை நீர் சேகரிப்பு இடம்பெற்றது.

இந்த விடுதலை நீர் சேகரிப்பதற்கு முன்னர் இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது. பின்னர் அராலிப் பகுதி மக்கள், சிறுவர்கள் ஆகியோர் தமது வீட்டில் இருந்து எடுத்து வரப்பட்ட விடுதலை நீரை பானையில் ஊற்றினார். குரல் அற்றவர்களின் குரல் அமைப்பினால் முன்னெடுக்கப்படும் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்திய இந்த வேலைத்திட்டத்தில் அந்த அமைப்பின் செயற்பாட்டாளர் மு.கோமகன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள், சிறகுகள் அமைப்பினர், முத்தமிழ் சன சமூக நிலையத்தினர், அராலி பகுதி மக்கள் மற்றும் சிறார்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறித்த செயல்திட்டமானது வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் எங்கும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்காலத்தில் அரசியல் கைதிகளின் விடுதலையை விரும்பும் புலம்பெயர் தேசங்களிலும் இந்த விடுதலை நீர் சேகரிக்கப்பட உள்ளது. இவ்வாறு சேகரிக்கப்படும் நீர் விடுதலை மரம் ஒன்றினை நாட்டி வைத்து அந்த மரத்துக்கு ஊற்றப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இளைஞர் கழங்கள் முழுமையாக அரசியல் மயமாக்கப்படுகின்றன

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

நீண்ட காலமாக, நமது நாட்டின் இளைஞர் யுவதிகளுக்கு இனம், மதம், சாதி, வர்க்கம் மற்றும் கட்சி ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் உரிய பிரதிநிதித்துவத்தைப் பெற்றுத் தந்த இளைஞர் கழகங்கள் இப்போது முழுமையாக அரசியல் மயமாக்கப்பட்டு, தற்போதைய ஆளும் தரப்பின் பகடைக்காயாக மாற்றப்பட்டு, ஜே.வி.பி.யின் அரசியல் பிடியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இளைஞர் சம்மேளன உறுப்பினர்களுடன் நேற்று நடைபெற்ற சந்திப்பின் போதே இவ்வாறு ☞2

## தகவலறியும் உரிமை ஆணைக்குழுவின் தலைவராக ஊடகவியலாளர் நியமனம்

இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் தலைவராக சிரேஷ்ட ஊடகவியலாளர் தயாலங்காபுர நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசுத் தலைவர் அநுரகுமாரவினால் இந்த நியமனம் வழங்கப்படுள்ளது.

1965ஆம் ஆண்டு பத்திரிகைத்துறையில் பிரவேசித்த தயா லங்காபுர, கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாவார்.

சிலுமின, திவயின, தினமின உள்ளிட்ட பல பத்திரிகைகளில் பணியாற்றிய இவர், நீதிமன்ற அறிக்கையிடலில் விரிவான அனுபவமுள்ள ஊடகவியலாளர் ஆவார்.

## 61 இந்திய மீனவர் விடுதலையை வலியுறுத்தி இராமேஸ்வரத்தில் நாளை முதல் போராட்டம்

தமிழ்நாடு அரசின் மீன்பிடித் தடைக் காலம் முடிந்து மீன்பிடிக்கச் சென்ற 55 நாட்களில் இந்தியா தமிழ்நாடு இராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த 61 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு இலங்கை சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதைக் கண்டித்தும், மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தியும், இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் நாளை முதல் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளனர்.

இராமேஸ்வரம் அனைத்து ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

எல்லாம் மறைமுகமாகவே நடந்து வந்தன. அதாவது நேரடி வருமான வரி, பொருள்கள் சேவைகள் ஊடான வரி என்று மக்களிடம் இருந்து புடுங்கும் பணத்தைப் பின்னர் அபிவிருத்தித் திட்டம் அல்லது மக்கள் சேவை என்ற பெயரில் அரசியல்வாதிகள் ஆட்டையைப் போட்டுக்கொண்டார்கள்.

அரசியல்வாதிகளே இப்படியிருக்கையில் வியாபாரிகள் சும்மா இருப்பார்களா? அவர்களும் தம் பங்குக்கு மக்களிடம் மோசடி செய்திருக்கிறார்கள். பொருட்களின்விலையைக் கூட்டியும் கலப்படம் செய்தும் வியாபாரிகள் மக்களிடம் மோசடி செய்வது வழமைதானே என்கிறீர்களா? அதுவும் சரிதான். ஆனால் இன்று நான் சொல்லப்போவது சற்று வினோதமானது.

பாதுகாப்பாக சீல் செய்யப்பட்ட போத்தல்களுக்குள்ளேயே கலப்படம் செய்து ஏமாற்றியிருக்கிறார்கள் என்பது பற்றியது அந்தத் தகவல். முன்னணி மதுபான நிறுவனத்தால் விநியோகிக்கப்படும் மதுபான போத்தல்களில் தண்ணீரைக் கலந்து விற்பனை செய்த மோசடி பற்றியது அந்த் தகவல்.

இந்த மோசடியாளர்கள் மதுபான போத்தல்களின் மூடிகளை மிக சூட்சுமமாக அகற்றி, அவற்றில் தண்ணீரைக கலந்த பின்னர் மீண்டும் மூடிகளை இறுக்க மூடி புதிய போத்தல்கள் போலவே விற்பனை செய்திருக்கிறார்களாம்.

மதுவரி அதிகாரிகள் இதுபோன்ற 33 மதுபான போத்தல்களைக் கையகப்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில் மதுவரி ஆணையர் நாயகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய, அந்த மதுபானசாலைக்குசீல்வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த மோசடியில் ஈடுபட்டவர்களைச் சட்டத்தின் முன்நிறுத்த மதுவரி அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பாவம்பெரும்குடிமக்கள்அவர்களிடம்போய் இப்படி மோசடி செய்திருக்கிறார்களே!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குளத்தில் சனிக்கிழமை காலை இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. 2025.08.08 அன்று நான்கு அல்லது ஐந்து பேர் முல்லைத்தீவு இராணுவ முகாமுக்கு இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். அவர்களில் நால்வரால் முகாமில்இருந்துதப்பிச்செல்லமுடிந்துள்ளது.. ஒருவர் காணாமல் போயுள்ளார். அவரின் உடல்தான் குளத்தில் இருந்து பின்னர் மீட்கப்பட்டுள்ளது.

முகாமுக்குள் வைத்து இராணுவத்தினர் தம்மை மிக மோசமாக தாக்கினர் என்று தப்பித்து வந்தவர்கள் தெரிவித்துள்ளார்கள். இராணுவத்தினரால் தாக்கப்பட்டு அடித்துக் கொல்லப்பட்ட இளைஞரின் சடலம் குளத்தில் வீசப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் உடன் விசாரணை செய்யப்பட வேண்டும். பொறுப்பானவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின்முன் முன்னிறுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தோம். சன்க்கிழமை மாலை முல்லைத்தீவு பொலிஸாரினால் ஒரு சில இராணுவத்தினர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அதில்மூவர்தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் எவ்வித தலையீடுகளுமின்றி முறையான விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும். பிரதான விடயம் யாதெனில் ஒரு சம்பவம் இடம்பெற்றதன் பின்னர் அது தொடர்பில் விசாரிக்கப்படவேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்என்று சொல்லுவது பிரயோசனமற்றது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினர் அப்பிரதேச மக்களுக்கு எதிராக செயற்படுகிறார்கள். மக்கள் மீது வன்முறைகளைக்கட்டவிழ்த்துவிடுகிறார்கள். இதற்கு செம்மணி ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

சித்துப்பாத்தி செம்மணி பகுதியில் குறுகிய காலத்துக்குள் 147 இற்கும் அதிகமான மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. பல வருடங்களுக்குமுன்னர்இராணுவத்தினரால் கொல்லப்பட்டவர்கள் இவர்கள் என்பது தற்போது தெரியவருகிறது.

இவ்வாறானபின்னணியில்வடக்குமற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினர் தொடர்ச்சியாக குடிக்கொண்டுள்ளதாகலும் அதனால்ஏற்படும்பாதிப்பைமிகவன்மையாகக் கண்டிக்கிறோம். அதேவேளைஇராணுவத்தின் இருப்புக்குப்பெரும்எதிர்ப்புதெரிவித்துஓகஸ்ட் 15 வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் முழுமையான கடையடைப்பில் ஈடுபடுமாறு சகல தரப்பினரிடமும் கோருகிறோம். எமது மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் மற்றும் அநீதிகளை கருத்திற்கொண்டு வர்த்தகர்கள் அன்றைய தினம் கடையடைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

சகல நடவடிக்கைகளையும் கைவிட்டு ஓகஸ்ட்15வடக்குமற்றும்கிழக்குமாகாணங்கள் முழுமையாக முடங்க வேண்டும். இதற்கு அனைவரதுஒத்துழைப்பையும்கோருகிறோம். ஏனைய அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புக்கள், மக்கள் அமைப்புக்கள், வர்த்தகர்கள், ஒன்றிணையவேண்டும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில்

## பொலிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக மக்களோடு இணைந்து பெரும் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்படுமெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒட்டுசுட்டான் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியிடம் தெரிவித்துள்ளார்.

மக்களின் முறைப்பாட்டுக்குள்ளாகியுள்ள பொலிஸ் உத்தியோகத்தர் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப் பிரிவிற்குட்பட்ட மக்கள் மீது பொய் குற்றங்களைப் பதிவுசெய்வது, அவர்களை அத்துமீறித் தாக்குவது, மனஉளைச்சல் ஏற்படும் வகையில் செயற்படுவது உள்ளிட்ட பல்வேறு கொடுமைகளில் ஈடுபடுகின்றார் என்று மக்கள் தன்னிடம் முறையிட்டுள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தெரிவித்தார்.

## இளைஞர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இளைஞர் கழகங்கள் சோசலிச இளைஞர் சங்கம் என்ற அரசியல் அமைப்பின் பணயக் கைதிகளாக மாறிவிட்டன. பிரதேச மட்டம், மாவட்ட மட்டம் மற்றும் தேசிய மட்டம் என்ற அடிப்படையில் செயல்பட்ட இளைஞர் சம்மேளனங்கள், இன்று இளைஞர் யுவதிகளின் ஆற்றல் திறமைக்கு இடம்கொடுக்காமல் ஜேவிபியின் ஆதிக்கத்திற்குட்பட்டுள்ளன. நியமிக்கப்படவுள்ள தேசிய இளைஞர் சம்மேளன தெரிவில் ஆளும்தரப்பினரின் அரசியல் ஆதரவாளர்கள் மட்டுமே நியமிக்கப்படவுள்ளனர்.

அரசஅதிகாரம், ஆளும்தரப்பின் அதிகாரம், அமைச்சு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர், அதிகாரிகள் போன்றவற்றின் அதிகாரங்களைப் பயன்படுத்திஇளைஞர்கள்மீதுஅழுத்தங்களைச் செலுத்தி வருகின்றனர். தற்போதைய ஆளும்தரப்பு இளைஞர்களிடமிருந்து பறித்த இளைஞர்களினது உரிமைகளை, ஜனநாயக உரிமைகளை இளைஞர்களுக்கு மீண்டும் பெற்றுத் தருவோம்.

இந்த விடயத்தில் நாம் மிகவும் முற்போக்கான, ஜனநாயக ரீதியிலான முன்னெடுப்பை நோக்கி நகர்வோம். ஆளும்தரப்பு செய்த இந்த தவறான செயல்முறையை கைவிடாவிட்டால் இந்த மோசமான செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள அனைவரும்எதிர்காலத்தில்இளைஞர்களுக்கு பதிலளிக்க வேண்டி வரும் என்றார்.

## கொக்குத்தொடுவாய்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்களைக் கண்டுபிடிப்பதற்கான காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பரந்த முயற்சிகளின் ஒரு அங்கமாகும்.

2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமல்போன ஆட்கள்பற்றிய அலுவலகம் (தாபித்தல், நிருவகித்தல் மற்றும் கருமங்களை ஆற்றுதல்) சட்டத்தின் பிரிவு 12 (ஆ) இன் கீழ், காணாமல் போனோர் அலுவலகம் அதன் கடப்பாடுகளின்படி, மனிதப் புதைகுழி மீதான விசாரணையைக் கண்காணித்து வருகிறது.

புதைகுழியில் உள்ள மனித எச்சங்களின் அடையாளம் குறித்து தீர்மானம் மேற்கொள்வதற்குத் துணைபுரியுமாறு காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திடம் முல்லைத்தீவு நீதவான் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையிலும் வெளிநாட்டிலும் உள்ள பொதுமக்களிடம் இந்த வழக்கு தொடர்பான முக்கியமான தகவல்கள் இருக்கலாம் என்பதை காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் நம்புகிறது.

புதைகுழி அகழ்வின் போது கண்டுபிடிக்கப்பட்டு அடையாளப்படுத்தப்பட்ட பொருட்கள் தொடர்பில் பொதுமக்கள் தகவல்களையும் அடையாளங்களையும் உறுதிப்படுத்த கொள்ள முடியும்.

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திடம் கொக்கு தொடுவாய் மனிதப் புதைகுழி சான்று பொருட்களை இனம் காணும் குடும்ப உறுப்பினர்கள் அல்லது நெருங்கிய நண்பர்களிகளிடமிருந்து புதைகுழியில் உள்ள எச்சங்கள் குறித்த சாத்தியமான அடையாளங்கள், அவற்றின் அம்சங்கள், உடைகள், முந்தைய காலங்களில் ஏற்பட்டிருந்த காயங்கள் போன்றவற்றை விவரிக்க முடியும்.

வழங்கும் தகவலின் அடிப்படையில், காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பயிற்சி பெற்ற அதிகாரிகள், இந்த வழக்கு தொடர்பான முக்கியமான தகவல்களைக் கொண்ட சாத்தியமான உறவினர்கள், சாத்தியமான சாட்சிகள் தொடர்பில் நேர்காணல் செய்வார்கள்.

அலுவலக சட்டத்தின் கீழ், இரகசியத்தன்மையை உறுதி செய்வதற்கும் (பிரிவு 12 (இ) (ர)) சாட்சி மற்றும் குடும்ப உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் (பிரிவு 13(1) (எ) மற்றும் 18) காணாமற்போனோருக்கான அலுவலகம் கடமைப்பட்டுள்ளது.

இந்த நேர்காணல்கள் மூலம் உணர்ச்சியைத் தூண்டக்கூடிய சாத்தியக்கூறுகள் குறித்தும் காணாமல் போனோர் அலுவலகம் அறிந்திருக்கிறது. இதனால் உளவியல் ரீதியான சேவைகளும் வழங்கப்படும்.

இது தொடர்பான தகவல்களை இலக்கம் 40 மூன்றாம் மாடி புத்கமுவ வீதி ராஜகிரிய, இல 54 தர்மாராம வீதி கோட்டை மாத்தறை, துணை அலுவலகம் மாவட்ட செயலகம் முல்லைத்தீவு, கோட்டை வீதி பழைய மாவட்ட செயலக கட்டிடம் மட்டக்களப்பு, மூன்றாம் மாடி புதிய கட்டிடம் மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம், மாவட்ட செயலகம் மன்னார், பு9 வீதி நீதிமன்றம் அருகாமை கிளிநொச்சி ஆகிய அலுவலகங்களில் 05.08.2025 ஆந் திகதி முதல் 04.09.2025 ஆந் திகதி வரையில் வருகை தந்து தகவல்களை வழங்குமாறு அல்லது ராஜகிரிய 0112861431 ,மாத்தறை 0412244684, முல்லைத்தீவு 0212286030, மட்டக்களப்பு 0652222229 , யாழ்ப்பாணம் 0212219400 மற்றும் மன்னார் 0232223929 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் மூலம் தகவல்களை வழங்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## இராணுவ ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவருக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம் மற்றும் அக்கட்சியின் பொதுச்செயலாளர் அரசுத் தலைவர் சட்டத்தரணி சுமந்திரன் கடிதம் ஒன்றை நேற்று அனுப்பிவைத்தனர்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முல்லைத்தீவு முத்துஐயன்கட்டு குளத்தில் நேற்று (நேற்றுமுன்தினம்) காலை எதிரிமன்சிங்கம் கபில்ராஜ் என்பவரின் உடல் மீட்கப்பட்டமை தொடர்பில் உங்கள் கவனத்துக்கு அறிவுறுத்துகிறோம்.

2025.08.07 ஆம் திகதியன்று இலங்கை இராணுவத்தின் 63ஆவது பிரிவு முகாமுக்கு 5 ஆண்கள் இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்கள். இவர்கள் இராணுவத்தால் கடுமையாக தாக்கப்பட்டுள்ளமை தற்போது தெரியவந்துள்ளது.

இவர்களில் கபில்ராஜ் என்பவர் காணாமல் போயுள்ளார். பின்னர் அவரது உடல் முத்து ஐயன்கட்டுகுளத்தில்இருந்துமீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம்தொடர்பில்சிலஇராணுவத்தினர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அறிய முடிகிறது. தடையற்றவகையில்முழுமையான விசாரணைகளை நடத்தி குற்றவாளிகளை சட்டத்தின் முன்னிறுத்துவது மட்டுமல்லாமல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தின் அடக்குமுறையான நடத்தை மற்றும் அதிகப்படியான பிரசன்னத்தையும் உங்களின்கவனத்துக்குகொண்டுவருகிறோம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தின்அதிகப்படியானபிரசன்னத்தை உடனடியாக தடுக்க உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும், இந்த சம்பவத்தில் நீதிக்கான செயல்முறை தலையீடின்றி மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்யுமாறும் உங்களிடம் கேட்டுக்கொள்கிறோம்.

இன்றுவரைதொடரும்இராணுவத்தினரின் கொடூர செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் முழுவதும் ஓகஸ்ட் 15 வெள்ளிக்கிழமை முழு கடையடைப்பில் ஈடுபட அழைப்பு விடுத்துள்ளோம் - என்றுள்ளது,

## 61 இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசைப்படகு மீனவ சங்க தலைவர் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து இந்தத் தகவல்களைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறையில்உள்ளமீனவர்களைவிடுதலை செய்வதில் காலதாமதமாகும் பட்சத்தில் ஓகஸ்ட் 15 உண்ணாவிரத போராட்டம், ஓகஸ்ட் 19 தொடருந்து மறியல் போராட்டம் என்பவற்றில் ஈடுபடுவது என்று மீனவர்கள் நடத்திய ஆலோசனை கூட்டத்தில் முடிவு செய்துள்ளனர்.

மீன்பிடி தடைக்காலம் முடிந்து இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 55 நாட்களில் நேற்று வரை 61 மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில்கைது செய்யப்பட்டுஇலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை சிறையில் உள்ள 61 இராமநாதபுரம் மாவட்டம் மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்ய கோரியும், தொடர் கைது நடவடிக்கையை தடுத்து நிறுத்த வலியுறுத்தியும், தமிழக மீனவர்கள் பிரச்சினை இன்றிக் கடலில் மீன் பிடிப்பதற்கு இரு நாட்டு அரசும் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியும்நாளைமுதல்இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவது என்று முடிவு செய்துள்ளனர்.

மீனவர்களை இலங்கை அரசு விடுதலை செய்வதில் கால தாமதம் செய்யும் பட்சத்தில் 13ஆம் திகதி தங்கச்சிமடத்தில் ஆர்ப்பாட்டம், 15ஆம்திகதிசுதந்திரதினத்தன்றுஉண்ணாவிரத போராட்டம் நடத்தப்படும் எனவும், அதனை தொடர்ந்து வரும் 19ஆம் திகதி ரயில் மறியல் போராட்டத்தில் இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் தங்கள் குடும்பத்தினருடன் ஈடுபட போவதாக இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) நடந்த மீனவர்களின் அவசர ஆலோசனை கூட்டத்தில் மீனவர்கள் முடிவு செய்துள்ளனர்.

மீனவர்களின் இந்த தொடர் வேலை நிறுத்தம் காரணமாக இராமேஸ்வரத்தில் சுமார் 600க்கும் மேற்பட்ட மீன்பிடி விசைப் படகுகள் கரையில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளன. மேலும் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தால் தினசரி சுமார் ஒரு கோடி இந்திய ரூபா வரையில் அந்நிய செலாவணி வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

## சமஷ்டி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணத்திற்கு மீளப்பெற முடியாத அதிகார பகிர்வுடன் கூடிய சமஸ்டி முறையிலான அரசியல் தீர்வினை அரசிடம் வலியுறுத்தினர்.

இதில் பெருமாபாலான மக்கள் கலந்து கொண்டு போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# இளைஞர் சங்கங்களின் பிரச்சினையை கலந்துரையாடித் தீர்த்துக்கொள்ளுங்கள்

## ஆளும்தரப்பு எதிர்க் கட்சிகளிடம் ரணில் வேண்டுகோள்

நாற்பது வருடங்களாக இளைஞர் யுவதிகள் முன்னுக்குவர கைகொடுத்த இளைஞர் சங்கங்களில் தற்போது தலைதூக்கி இருக்கும் பிரச்சினையை இரண்டு தரப்பும் கலந்துரையாடி தீர்த்துக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் தற்போது இடம்பெறும் போராட்டம் அரசியல் பிரச்சினையாக மாறி, இளைஞர் சங்க அமைப்பு இல்லாமல் போய்விடும் என முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இளைஞர் சங்க அமைப்பில் தற்போது தலைதூக்கி இருக்கும் பிரச்சினையை விரைவாக தீர்த்துக்கொள்ள வேண்டியதன் முக்கியம் தொடர்பில் அவர் நேற்று ஆற்றிய விசேட உரையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை இளைஞர் யுவதிகளின் வேண்டுகோளின் பேரில், இற்றைக்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு இளைஞர் சங்கத்தை நான் தொடங்கினேன். அது கிராமத்தில் இருக்கும் இளைஞர் யுவதிகளின் பொழுதுபோக்கு, கலை மற்றும் பிற செயற்பாடுகளுக்காக ஒன்றுகூடுவதற்கான ஒரு இடம். அந்த இளைஞர் சங்கம் ஊடாக இளைஞர்களின் திறமைகளையும் திறன்களையும் முன்னேற்றுவதே நான் எதிர்பார்த்த அடிப்படை விடயமாகும். அந்த விடயங்களில் அதிகமானவை வெற்றியடைந்துள்ளன. தற்போது, சமூகத்தின் பல்வேறு துறைகளுக்காக இளைஞர்கள் பங்கேற்கின்றனர்.

இந்த நாற்பது வருட காலத்துக்குள் இளைஞர் சங்கங்கள் இந்த நாட்டில் பிரதான இளைஞர் அமைப்பாக மாறியிருக்கிறது. இளைஞர் சங்கங்களால் முன்னுக்கு வந்திருந்த ஒருசிலர் அரசியலுக்கு வந்திருக்கிறார்கள். மேலும் சிலர் வியாபார நடவடிக்கைகளில் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் அந்த வேலைத்திட்டத்தை முன்னுக்கு கொண்டுசெல்ல ஒத்துழைப்பு வழங்கினார்கள்.

அண்மையில் அமைச்சர் அந்த யாப்புக்கு முன்வைத்திருந்த திருத்தங்கள் தொடர்பில் பாரிய பிரச்சினை எழுந்துள்ளாது. எல்லா இடங்களிலும் போராட்டம் இடம்பெறுகிறது.

தற்போதைக்கு தேசியசம்மேளம் இடம்பெறுகிறது. எனக்குகிடைத்ததகவலின்பிரகாரம், அதற்கு பின்னரும் போராட்டம் நடத்தப்போகிறார்கள். இவ்வாறு சென்றால் இளைஞர் சங்க அமைப்பு வீழ்ச்சியடையும். இளைஞர் சங்கத்தை அரசியல் மயமாக்குவதற்காகவே குறித்த திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாக போராட்டம் மேற்கொள்பவர்கள் தெரிவிக்கிறார்கள். இந்த பிரச்சினையை நீண்ட தூரத்துக்கு இழுத்துக்கொண்டு செல்லாமல் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு போராட்டம் மேற்கொள்கின்ற முன்னாள் அதிகாரிகள் குழு தற்போது நியமிக்கப்பட்டிருக்கும் மாவட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி, அனைவரும் திருப்தியடையக்கூடிய தீர்வொன்றை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

இந்த நாட்டின் இளைஞர் சங்கங்களை அரசியலுக்காக பயன்படுத்துவதில்லை என நாங்கள் அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும். அதனை அமைச்சருக்கும் இந்த இரண்டு குழுக்களுக்கும் ஒன்றாக இணைந்து மேற்கொள்ள முடியுமான ஒரு நடவடிக்கையாகும். இந்த விடயத்தை செய்யாவிட்டால் தற்போது இடம்பெறும் போராட்டம் அரசியல் பிரச்சினையாக அமையும். அதன்போது இதற்குள் அரசியல் கட்சிகளும் உள்வாங்க முடியும். அவ்வாறு இடம்பெற்றால் இந்த இளைஞர் சங்கம் அமைப்பு இல்லாமல் போய்விடும். எனக்கு தேவையாக இருப்பது, இந்த இளைஞர் சங்க அமைப்பை பாதுகாப்பதாகும். அதனாலே இந்த குறுகிய செய்தியை வழங்க தீர்மானித்தேன் என்றார்.

# அனைத்து மாகாணங்களிலும் குற்றவிசாரணைப் பிரிவுகள்

## குற்றங்களைத் தடுக்க சிறப்பு நடவடிக்கை

அனைத்து மாகாணங்களிலும் குற்றவிசாரணை பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

குற்றச்செயல்களை தடுக்கும் விசேட நடவடிக்கையின் கீழ் இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பொலிஸ் உத்தியோகத்தர்களால் பொதுமக்களுக்கு இழைக்கப்படும் குற்றங்கள் தொடர்பில் அறிவிப்பதற்காக விசேட வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மாஅதிபர் தெரிவித்தார்.

# இலங்கை இராணுவத்தின் அடக்குமுறை முல்லை சம்பவம் ஊடாக வெளிப்பட்டது

## கோமகன் சுட்டிக்காட்டு

முத்துஐயன்கட்டு குளப்பகுதியில் இடம்பெற்ற படுகொலை மூலம் மீண்டும் இராணுவத்தினரின் அராஜகம் வெளிபட்டிருப்பதாக குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் செயல்பாட்டாளர் கோமகன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - அராலியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர் தாயகப் பகுதிகளில் தொடர்ச்சியாக ஆக்கிரமிப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. யுத்த காலத்தில் எவ்வாறு இராணுவ மயமாக்கப்பட்டிருந்ததோ அதே இராணுவமயமாக்கல் தொடர்ச்சியாக தாயக பிரதேசங்களில் நிலவுகிறது.

தென்பகுதியில் இவ்வாறான இராணுவ எண்ணிக்கையோ அல்லது இராணுவ செயல்பாடுகளோ காணப்படுவதில்லை. ஆனால் எமது பிரதேசங்களிலேயே இது காணப்படுகின்றது.

எனவே உடனடியாக இந்த இராணுவமயமாக்கலை நிறுத்த வேண்டும். தமிழர் தாயகங்களில் உள்ள இராணுவத்தினரை தென்பகுதிகளுக்கு அனுப்பினால் தமிழர் தாயகங்களில் உள்ள இராணுவ மயமாக்கலை குறைக்கலாம்.

மீண்டும் இராணுவத்தினருடைய அடக்குமுறையானது முத்துஐயன்கட்டு குளத்தடியில் மேற்கொள்ளப்பட்ட குடும்பஸ்தரின் படுகொலை மூலம் வெளிப்பட்டு நிற்கின்றது. எனவே இராணுவத்தினரின் இவ்வாறான அராஜகங்கள் உடனடியாக கட்டுப்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

# அழிந்துவரும் பறவையினத்துக்காக வேலணையில் விழிப்புணர்வு பலகை



இயற்கைக்கான கூட்டிணைவில் சமூக பங்களிப்பை மேம்படுத்தும் நோக்குடன் அழிவின் விளிம்பில் இருக்கு. இந்திய கோசர் (Indian Courser) பறவையானத்தை பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் ஓர் அங்கமான விழிப்புணர்வு பலகை ஒன்று மண்கும்பான் பிள்ளையாளர் கோவிலுக்கு முன்புறமாக நேற்று நாட்டப்பட்டது,

இந்தப் பறவையினம் மிகவும் அரிதான, அழிந்துவிடும் ஆபத்தின் விளிம்பில் காணப்படும் பறவையாகும். இதேநேரம் இலங்கையில் வடபகுதியான நெடுந்தீவில் மட்டுமே இந்தப் பறவை காணப்படுகின்றது..

அழிவின் விளிம்பில் இருக்கும் குறித்த பறவையைப் பாதுகாப்பதற்காக சி.சி.எச் நிறுவனம், இயற்கை ஊக்குவிப்பு கழகம் மற்றும் டயலொக் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது..

அத்துடன் குறித்த செயற்றிட்டத்தை முன்னெடுப்பதற்கு நெடுந்தீவு பிரதேச செயலகம், வட மாகாண சுற்றுலா பணியகம், நெடுந்தீவு பிரதேச சபை, வேலணை பிரதேச சபை, நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம் ஆகியனவும் பெரும் பங்களிப்பை வழங்கிவருகின்றன.

இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக குறித்த பறவையினத்தின் இருப்பை உறுதிசெய்யும் செயற்றிட்டத்தின் விழிப்புணர்வு பலகை வேலணை பிரதேசத்தின் மண்கும்பான் பகுதியில் கால் நடை மேச்சல் தறைக்காக அடையாளப்படுத்தப்பட்ட அரச நிலத்தில் நாட்டிவைக்கப்பட்டது

இந்த நிகழ்வில் நெடுந்தீவு பிரதேச செயலர், வேலணை பிரதேச சபையின் தவிசாளர், வேலணை பிரதேச சபை உறுப்பினர், வேலணை பிரதேச சபையின் அதிகாரிகள், டயலொக் நிறுவன உத்தியோகத்தர்கள், இயற்கை ஊக்குவிப்பு கழக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# இந்திய தூதரக அதிகாரிகளுடன் இ.தொ.கா. பிரதிநிதிகள் சந்திப்பு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிகள், இந்திய தூதரக அதிகாரிகளை நேற்று நுவரெலியா கிரேண்ட் ஹோட்டலில் சந்தித்து கலந்துரையாடல்களை மேற்கொண்டார்கள்.

இலங்கைக்கான இந்திய துணை உயராணையர் டாக்டர் சத்தியாஞ்சல் பாண்டே மற்றும் இந்திய இணை உயராணையர் (கண்டி) வீ.எஸ். சரண்யா ஆகியோரை, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முக்கியஸ்தர்கள் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்த சந்திப்பில், இருநாட்டு நட்புறவு, தொழிலாளர் நலன், சமூக முன்னேற்றம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து விரிவான பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இதன்போது இ.தொ.கா சார்பில் நிதிச்செயலாளரும், தவிசாளருமான மருதப்பாண்டி ராமேஸ்வரன், நுவரெலியா மாநகர சபை பிரதி மேயர் சிவன்ஜோதி யோகராஜ், கொட்டகலை பிரதேசசபை தவிசாளர் ராஜமணி பிரசாத், அமைப்பாளர் சின்னையா பாலகிருஸ்ணன் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ராக்கிங்கை முற்றாக ஒழிப்போம்

இலங்கையின் உயர்கல்வி நிறுவனங்களில் பல தசாப்தங்களாக நீடித்து வரும் ராக்கிங் (Ragging) எனப்படும் மாணவர் வதைச் செயற்பாடுகள், இன்னும் முற்றிலும் நிறுத்தப்படவில்லை. நவீன கல்வி, தொழில்நுட்ப முன்னேற்றம், சமூக விழிப்புணர்வு ஆகியவை விரிவடைந்துள்ள நிலையில்கூட, பல்கலைக்கழக வளாகங்களில் முதலாம் ஆண்டு மாணவர்களை உளவியல், உடல், சில நேரங்களில் பாலியல் வன்முறையால் துன்புறுத்தும் இந்தப் பழக்கம் தொடர்கிறது என்பது கல்வி அமைப்பின் ஒரு பெரிய களங்கமாகவே கருதப்பட வேண்டும்.

அண்மைக் காலங்களில், இந்தப் பிரச்சினையை எதிர்கொள்வதற்காக அரசு மற்றும் பல்கலைக்கழக நிர்வாகங்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. பல்கலைக்கழக மாணவர் வதைத் தடுப்புச் சட்டம் (Prohibition of Ragging and Other Forms of Violence in Educational Institutions Act – 1998) இயற்றப்பட்டு, ராக்கிங் குற்றமாக அறிவிக்கப்பட்டது. இதன் கீழ் குற்றவாளிகளுக்கு சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கப்படும். அதோடு, பல்கலைக்கழகங்களில் முறைப்பாட்டு மையங்கள், விசாரணைக் குழுக்கள், மற்றும் மாணவர் ஆலோசனை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சில பல்கலைக்கழகங்களில் கண்காணிப்பு கமெராக்கள் நிறுவப்பட்டுள்ளன. புதிய மாணவர்களுக்கான பாதுகாப்பு வாரங்கள், விழிப்புணர்வு நிகழ்வுகள், மற்றும் ராக்கிங் எதிர்ப்பு உறுதிமொழிகள் நடைமுறைக்கு வந்துள்ளன.

எனினும், இந்த நடவடிக்கைகள் நடைமுறையில் எதிர்பார்த்தளவு பயனளிக்கவில்லை என்பதே உண்மை. இதற்கு முக்கிய காரணம், ராக்கிங்கை 'பழக்கவழக்கமாக' அல்லது 'வளாகச் சேர்க்கைச் சடங்காக' பார்க்கும் தவறான மனப்போக்கு ஊறிப் போயிருப்பதுதான். சில மூத்த மாணவர்கள், ராக்கிங் என்பது "ஒற்றுமையை உருவாக்கும்" அல்லது "கடின சூழ்நிலைகளுக்குத் தயார்படுத்தும்" ஒரு வழி என்ற பிழையான கருத்தில் செயல்படுகிறார்கள். இந்தக் கருத்து, மன அழுத்தம், தாழ்வு மனப்பான்மை, படிப்பில் விருப்பக் குறைவு, மற்றும் சில நேரங்களில் தற்கொலை போன்ற பேரழிவுகளை ஏற்படுத்தும் என்பதை அவர்கள் உணரவில்லை அல்லது புறக்கணிக்கிறார்கள்.

ராக்கிங் என்பது, ஒரு மனிதரின் அடிப்படை மனித உரிமைகள் மீதான நேரடியான மீறல். ஒரு மாணவர் கல்வி நிறுவனத்துக்குள் நுழையும்போது, அவர் தான் பாதுகாப்பான சூழலில் இருப்பதாக நம்புகிறான். ஆனால் அந்த நம்பிக்கையை முதலிலேயே உடைத்துவிடும் செயல் ராக்கிங். கல்வி வழங்கும் இடம், மாணவர்களின் திறமைகளை வளர்க்கும் தளம் மட்டுமல்ல; அவர்களின் கண்ணியம், நம்பிக்கை, மனநலன் ஆகியவற்றையும் காக்க வேண்டிய புனித இடமாக இருக்க வேண்டும்.

இந்தப் பிரச்சினையை முழுமையாக தீர்க்க, அரசு, பல்கலைக்கழக நிர்வாகம், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மற்றும் மாணவர்கள் ஆகியோரின் ஒருங்கிணைந்த செயல்பாடே தேவை. முதலில், சட்டத்தின் கடுமையான அமலாக்கம் உறுதி செய்யப்படவேண்டும். ராக்கிங் சம்பவங்கள் நேர்ந்தவுடன், விசாரணை விரைவாக முடிக்கப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும். "முதல் தவறு என்பதால் மன்னிக்கலாம்" என்ற அணுகுமுறை, குற்றத்தை ஊக்குவிக்கும்.

இரண்டாவது, மனநல ஆலோசனையும் விழிப்புணர்வும் பரவலாக வழங்கப்படவேண்டும். மூத்த மாணவர்களுக்கு, ராக்கிங்கின் மனநல பாதிப்புகளை விளக்கும் பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும். புதிய மாணவர்களுக்கு, தங்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்ளவேண்டும், எங்கே முறைப்பாடுகள் செய்யவேண்டும் என்பதற்கான வழிகாட்டுதல் வழங்கப்படவேண்டும்.

மூன்றாவது, மாற்று சமூக ஒருங்கிணைப்பு முறைகள் உருவாக்கப்படவேண்டும். ராக்கிங் இல்லாமல், விளையாட்டு, கலாச்சார நிகழ்வுகள், குழு விவாதங்கள் போன்ற வழிகளில் மாணவர்களிடையே நெருக்கத்தை உருவாக்க முடியும் என்பதை நிரூபிக்க வேண்டும்.

நான்காவது, பெற்றோர்கள் மற்றும் சமூகத்தின் பங்கு அதிகரிக்க வேண்டும். பல்கலைக்கழகங்களில் நடைபெறும் வதைச் செயல்களை வெளிப்படையாக சமூகத்தில் பேசும் சூழல் உருவாக வேண்டும். இது மாணவர்களுக்கு ராக்கிங் ஒரு சாதாரண விஷயம் அல்ல, கடுமையான குற்றம் என்பதை உணர்த்தும்.

எல்லாவற்றுக்கும் மேலாக பல்கலைக்கழக நிர்வாகிகளிடமும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்களிடமும் ராக்கிங் வேண்டத்தகாத ஒன்று, அது அடியோடு ஒழிக்கப்படவேண்டியது என்கிற எண்ணம் ஆழ வேரூன்ற வைக்கப்படவேண்டும். அதுவன்றி இந்த அபத்த வகைச் செயற்பாட்டை நிறுத்துவது முற்றிலும் முடியாத காரியம்.

ஊடகங்கள் மற்றும் பொது அழுத்தம் தொடர வேண்டும். ராக்கிங் சம்பவங்களை மறைப்பதற்கு பதிலாக, பொது விவாதத்திற்கு கொண்டு வருவது, நிர்வாகத்துக்கும் அரசுக்கும் பொறுப்புணர்வை அதிகரிக்கும்.

ராக்கிங் என்பது கல்வி தரும் நோக்கத்துக்கு விரோதமாகும். கல்வி, ஒருவரை வளர்க்கவேண்டும், உடைக்கக்கூடாது. மாணவர்களின் மனதில் பயத்தால் அல்ல, நம்பிக்கையால், மரியாதையால், நட்பால் நிரம்பிய உறவுகளை வளர்க்கும் சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

இலங்கை, கல்வியில் முன்னேற்றம் அடைய விரும்பினால், பல்கலைக்கழக வளாகங்களில் ராக்கிங் என்ற வன்முறை கலாசாரத்தை முற்றிலும் ஒழிக்க வேண்டும். இது வெறும் நிர்வாகச் சவாலாக அல்ல, சமூகத்தின் நெறி மற்றும் நாகரிகத் திறனைச் சோதிக்கும் கேள்வியாகும். இன்று எடுக்கப்படும் உறுதியான நடவடிக்கைகள் மட்டுமே, நாளைய வளாகங்களைப் பாதுகாப்பான, நட்பான, உண்மையான கல்வி மையங்களாக மாற்றும். இதற்கான முயற்சிகளுக்கு அனைவரும் கைகொடுக்கவேண்டியது காலத்தின் கட்டாயம்.



## இந்திய அமெரிக்க உறவில் முறிவு?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

இந்தியா ரஷ்யாவிடமிருந்து மிகப்பெரிய அளவில் எரிபொருளை இறக்குமதி செய்வது மட்டுமல்லாமல், அவ்வாறு வாங்கப்பட்ட எரிபொருளின் பெரும்பகுதியை உலக சந்தையில் மீள் விற்பனை செய்து பெரும் லாபம் ஈட்டுவதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் குற்றஞ் சாட்டியுள்ளார்.

மேலும் இந்தியாவின் இந்த நடவடிக்கையால் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் மீதான வரியை கணிசமாக உயர்த்துவேன் என்றும் அவர் கடுமையாக எச்சரித்துள்ளார்.

இந்தியாவும் அமெரிக்காவும் பல்வேறு துறைகளில், குறிப்பாக இராணுவம், தொழில்நுட்பம், மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றில் நெருங்கிய உறவைக் கொண்டுள்ளன. இந்த உறவு பல ஆண்டுகளாக வலுவாக இருந்து வருகிறது. மேலும் இரு நாடுகளும் எதிர்காலத்தில் மேலும் நெருக்கமாக இணைந்து செயல்பட ஆர்வமாக இருந்தன.

ஆனால் தற்போது இந்தியாவை கடுமையாக எச்சரித்த டொனால்ட் டிரம்ப், இந்திய அரசு ரஷ்ய எரிபொருளால் இலாபமீட்டுவதே காரணம் மட்டுமா அல்லது அதைவிட வேறு காரணங்களுமா என்பதை டிரம்ப் தனது ட்ரூத் சமூக தளத்தில் தெளிவாக பதிவிடவில்லை.

### இந்தியா மீது வரி தாக்கம்:




ஆயினும் வரி உயர்வின் அளவு குறித்து டிரம்ப் தெளிவாக எதுவும் தெரிவிக்கவில்லை. இந்த அறிவிப்பு இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தக உறவுகளில் பதற்றத்தை ஏற்படுத்தலாம் என அரசியல் வல்லுநர்கள் கருதுகின்றனர்.

அமெரிக்காவால் இந்தியா மீது சுமத்தப்பட்டுள்ள வரி மற்றும் அதன் தாக்கமானது குறுகிய காலம், நீண்ட காலம் பாதிப்பை ஏற்படுத்துகிறது. குறுகிய காலத்தில் ஏற்றுமதி நிச்சயம் குறையும். இதனால் ஏற்றுமதியாளரின் வருவாயும் குறையும். வரிகளால் விலைகள் அதிகரிக்கும். இத்துடன், கையெழுத்தாகியிருக்கவேண்டிய வர்த்தக ஒப்பந்தம் இதுவரை நடைபெறாததால் இந்தியாவிற்கு நிச்சயமற்றதன்மை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் நீண்ட கால தாக்கம்தான் மிகவும் முக்கியமானது ஏனென்றால், வரிகள் ஓராண்டுக்கு மேல் இருந்தால், விநியோக சந்தையில் மாற்றங்கள் ஏற்படலாம். இந்தியா சந்தைகளை விரிவுபடுத்த வேண்டும். குறுகிய காலத்தில், உடைகள், மருந்துகள், இயந்திர பகுதிகள், கடலுணவு மற்றும் தொழில் உற்பத்தி பொருட்கள் மீதுதான் அமெரிக்க வரிகளின் தாக்கம் அதிகமாக இருக்கும் என நம்பலாம்.

### அமெரிக்க பாகிஸ்தான் உறவு:

இந்தியாவுடன் முரண்படும் அமெரிக்கா, இப்போது பாகிஸ்தானுக்கு எதிராக அதன் வரிகளை குறைத்து கடைப்பிடித்துள்ளது. அமெரிக்க வணிகங்களுக்கு ஆதரவாக உலகளாவிய வர்த்தகத்தை மறுவடிவமைக்கும் தனது அண்மைய முயற்சியின் போது, ஆகஸ்ட் முதல் நாளில் வர்த்தக ஒப்பந்த காலக்கெடுவிற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு, பல நாடுகள் மீது அதிக வரிகளை விதிக்கும் புதிய நிர்வாக உத்தரவில் டிரம்ப் கையெழுத்திட்டார்.

ஆனால் அவர் பாகிஸ்தான் மீதான வரிகளை குறைத்து, முந்தைய 29 சதவீதத்திலிருந்து 19 சதவீதமாகக் குறைத்தார். ரஷ்யாவுடனான வர்த்தகத்தைத் இந்திய அரசு தொடர்ந்து நடத்தி வரும் நிலையில், ரஷ்யாவின் எண்ணெய் வாங்குவதற்கு இந்தியா மேல் பரஸ்பர வரிகளை அதிகரிப்பதாக டிரம்ப் அச்சுறுத்தி உள்ளார்.

ஏற்கனவே உயர்த்தப்பட்ட 25 சதவீத வரிகளைவிட அதிகமாக, இந்தியாவில் இருந்து வரும் பொருட்களுக்கான வரிகளை கணிசமாக உயர்த்துவதாகக் கூறியுள்ளார்.

### சிக்கலான மாறிவரும் உறவு:

தற்போது அமெரிக்கா மற்றும் பாகிஸ்தான் இடையே ஒரு சிக்கலான மாறிவரும் உறவு உள்ளது. இரு நாடுகளும் ஒரு காலத்தில் நெருங்கிய கூட்டாளிகளாக இருந்தன. ஆனால் சமீபத்திய ஆண்டுகளில் உறவுகள் மோசமடைந்துள்ளன. குறிப்பாக பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டம் மற்றும் பிராந்திய அரசியல் போன்ற விஷயங்களில் இரு நாடுகள் இடையே கருத்து வேறுபாடுகள் பல உள்ளன.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அமெரிக்கா மற்றும் பாகிஸ்தான் இடையே ஒரு நெருங்கிய உறவு இருந்தது. பனிப்போரின் போது, அமெரிக்கா சோவியத் யூனியனுக்கு எதிரான ஒரு கூட்டணியில் பாகிஸ்தானை ஒரு முக்கிய பங்காளியாக கருதியது. ஆப்கான்

அமெரிக்கா பாகிஸ்தானுக்கு இராணுவ மற்றும் பொருளாதார உதவிகளை வழங்கியது. அதே நேரத்தில் பாகிஸ்தான் அமெரிக்காவின் பிராந்திய நலன்களை ஆதரித்தது.

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

காலைக்கதிர் Kalaikkathir

# இந்திய............

4ம் பக்கத் தொடர்ச்சி...........

ஆனால் சமீபத்திய ஆண்டுகளில், அமெரிக்கா - பாகிஸ்தான்இடையேஉறவுகள்மோசமடைந்துள்ளன.



பாகிஸ்தான் அரசு பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் போதுமான அளவு செய்யவில்லை என்று குற்றம் சாட்டியுள்ளது. அமெரிக்கா பாகிஸ்தானுக்கு வழங்கும் இராணுவ மற்றும் பொருளாதார உதவிகளையும் குறைத்து வந்தது. மேலும் பாகிஸ்தான், அமெரிக்கா தனது பிராந்திய நலன்களை புறக்கணிக்கிறது என்றும், தனது சொந்த நலன்களை மட்டுமே கவனித்துக்கொள்கிறது என்றும் குற்றம் சாட்டியுள்ளது.

1971இல் பாகிஸ்தானுக்கான அமெரிக்க ஆதரவு:

தற்போதைய நிலையில் பல தசாப்தங்களாக பாகிஸ்தானை அமெரிக்கா எவ்வாறு ஆதரித்து வருகிறது என்பதைக் காட்டும் 1971 ஆம் ஆண்டு செய்தித்தாள் பதிவை பகிர்ந்து கொண்டதன் மூலம் இந்திய இராணுவம் அமெரிக்காவை கடுமையாக சாடியுள்ளது.

பங்களாதேசத்தின் 1971 போருக்கு முன்னரான தயாரிப்புப்பணிகளில்அமெரிக்காபலதசாப்தங்களாக பாகிஸ்தானுக்கு ஆயுதங்களை எவ்வாறு வழங்கி வந்தது என்பதை இது விவரிக்கிறது.

வங்கதேசத்தில் இஸ்லாமாபாத்தின் ஆயுத ஆக்கிரமிப்பின் பின்னணியில், பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள் வழங்குவது தொடர்பாக நேட்டோ சக்திகளும் சோவியத் ஒன்றியமும் எவ்வாறு தொடர்பு கொள்ளப்பட்டன என்பது குறித்து அப்போதைய பாதுகாப்பு உற்பத்தி அமைச்சர் வி.சி. சுக்லா மாநிலங்களவையில் கூறியதாக செய்தித்தாள் காணொளியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சோவியத் ஒன்றியமும் பிரெஞ்சு அரசாங்கமும் பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள் வழங்க மறுத்தாலும், அமெரிக்கா தனது ஆதரவைத் தொடர்ந்ததாக அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

மேலும்அமெரிக்காவும்சீனாவும்பாகிஸ்தானுக்கு ஆயுதங்களை விற்றதாகவும் அது கூறியது. இது 1971 ஆம் ஆண்டு இந்தியாவுடனான போரை பாகிஸ்தான் இரு நாடுகளும் வழங்கிய ஆயுதங்களைக் கொண்டு நடத்தியிருக்கலாம் என்பதைக் குறிக்கிறது.

## டிரம்ப -மோடி உறவு:

டொனால்ட் டிரம்பின் முதல் பதவிக்காலத்தில், பிரதமர் மோடியுடனான அவரது உறவு நெருக்கமான நட்புறவாக இருந்தது. சமீபத்தில் நடந்தவை இந்திய அரசுக்கு கணிசமான பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

இந்த வருட பாகிஸ்தானுடனான போரின்போது போர் நிறுத்தத்திற்கு உத்தரவிட்டதாக டொனால்ட் டிரம்ப் அறிவித்த விதமும், அதன் பின்னர் அதையே அவர் திரும்பத் திரும்ப கூறியதால் இந்திய நாடாளுமன்றத்தில் இதைக்குறித்த விளக்கம் அளிக்க வேண்டிய கட்டாயம் மோடிக்கு ஏற்பட்டது.

இருதரப்பு விவகாரத்தில் நீங்கள் எப்படி அமெரிக்கா தலையிட அனுமதித்தீர்கள் என எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பின. எப்போதும் குறிப்பாக பாதுகாப்பு விவகாரங்களில் கடுமையான நிலைப்பாட்டையே எடுக்கும் பாரதிய ஜனதா கட்சி சற்று பின்னடைவான நிலையை நோக்கி இதனால் சென்றது.

புதிய வர்த்தக ஒப்பந்தமானது மோடி டிரம்ப் இருவருமே செயல்முறை சார்ந்த தலைவர்கள் அல்ல என பல ஊடகங்கள் கருத்து தெரிவித்துள்ளன. மேலும் இந்த விவகாரதில் வெளியுறவு அமைச்சகம் மற்றும் வர்த்தக அமைச்சகம் என இரண்டின் தலையீடும் அதிகமாக இருக்கும். குறிப்பாக மிகவும் சிக்கலாக இருக்கும் வர்த்தக ஒப்பந்தத்தில் தலையீடு அதிகமாக இருக்கும். முன்பு மோடிக்கு டிரம்புடன் நல்லுறவு இருந்தாலும் இந்த விஷயத்தில் தற்போது செய்யக்கூடியது ஏதும் இல்லை என்று கூறப்படுகிறது.

2020இல் மோடி டிரம்பிற்காக பெரிய அளவிலான ஆதரவு நிகழ்ச்சிகளை நடத்தி, 'அப்கி பார் டிரம்ப் சர்க்கார்' என்று கூறி அவருக்கு மரியாதை கொடுத்து இருந்தார்.

இந்தியா மீது டிரம்ப் வரிவிதித்த விதமும் ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை வாங்கியதற்காக அபராதங்களை விதித்தும் இறையாண்மை மீதான தாக்குதலாகும் என்று இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஆனாலும் இந்திய அமெரிக்க உறவுகளில் பெரிய முறிவு ஏதும் ஏற்பட்டதாக இன்னமும் தெரியவில்லை. இருப்பினும், சில வர்த்தக மற்றும் அரசியல் காரணங்களால் இரு நாடுகளுக்கும் இடையே அவ்வப்போது கருத்து வேறுபாடுகள் எழுவதுண்டு. எடுத்துக்காட்டாக, அமெரிக்கா இந்தியா மீது சில வர்த்தக வரிகளை விதித்தபோது, அது இரு நாடுகளுக்கும் இடையே ஒரு சிறிய சலசலப்பை ஏற்படுத்தியது. ஆனால், அது இரு நாடுகளின் உறவை முறித்துக் கொள்ளும் அளவுக்கு பெரிய பாதிப்பை ஏற்படுத்துமா என்பதை எதிர்வரும் காலங்களில் தான் தெரியவரும்.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

# மன்னார் இல்மனைட் அகழ்வை எதிர்த்து யாழ்ப்பாணத்தில் நேற்றுப் போராட்டம்

மன்னாரில்பல்தேசியநிறுவனங்களின்இல்மனைட் கனிம மணல் சுரண்டலை கண்டித்து, இளைஞர்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த விழிப்புணர்வு போராட்டம் நேற்று மாலை யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தின் இயற்கை வளங்களில் ஒன்றாக மணல் உள்ளது. இந்த மணல், இல்மனைட் கனிமத்தை கொண்டிருப்பதால் உலகளவில் பெரும் கேள்வி உள்ளது. கடந்த சில ஆண்டுகளுக்கும் மேலாக அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பல்தேசிய நிறுவனம் ஒன்று இல்மனைட் மணல் அகழ முயற்சித்து வருகிறது.

இந்த அகழ்வைத் தடுக்கவும், மக்களின் பூர்வீக நிலங்களையும் இருப்பையும் பாதுகாக்கவும் 'கருநிலம் பாதுகாப்பு' என்ற கருப்பொருளுடன் மக்களை விழிப்புணர்வு செய்யும் போராட்டத்தை முன்னெடுக்க இளையோர் நடவடிக்கைகளை முன்னெடுத்த நிலையில் குறித்த விழிப்புணர்வு போராட்டம்யாழ்ப்பாணத்தில்இன்றுஇடம்பெற்றது.

இதன் போது கலந்து கொண்ட அரசியல் பிரதிநிதிகள், இளையோர் என பலரும் கலந்து கொண்டதுடன் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு மக்களுக்கு விழிப் புணர்வை ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு பேரணி ஒன்றையும் முன்னெடுத்தனர்.

## கத்திக்குத்தில் ஒருவர் சாவு

யாழ். மாவட்டம், புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தை சேர்ந்த அற்புதராசா அகிலன் (வயது 46) என்பவர் கத்திக்குத்திற்கு உள்ளாகி நேற்று உயிரிழந்துள்ளார்.

அவரைக் கத்தியால் குத்திக்கொன்ற நபரைப் பிடிக்க முயன்ற இரு பெண்கள் உள்ளிட்ட நால்வரையும் அவர் காயப்படுத்தியுள்ளார். அவர்கள் நால்வரும் யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்



## கபில்ராஜ்ஜின் உடல் மாதிரிகள் சோதனைக்காக கொழும்புக்கு



முல்லைத்தீவு முத்துஜயன்கட்டு குளத்தில் காயங்களுடன் மீட்கப்பட்ட இளைஞனின் சடலம் மீதான உடற்கூற்று பரிசோதனை யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்டது. எனினும் இறப்புக்கான காரணத்தைக் கண்டறிய உடல் மாதிரிகள் மேலதிக பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முத்துஐயன்கட்டுக்குளக்கரையில் அமைந்துள்ள முகாமிற்குள் வியாழக்கிழமை அழைக்கப்பட்ட ஐவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதில் ஒருவர் காணாமற்போயிருந்தார். 32 வயதான எதிர்மன்னசிங்கம் கபில்ராஜ் என்ற அந்த நபர் சனிக்கிழமை முத்துஐயன் கட்டுக் குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

நீதிவானின் முன்னிலையில் சடலம் குளத்திலிருந்து மீட்கப்பட்டதுடன், தடயவியல் பொலிஸாரால் தடயவியல் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து சடலம் உடல்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். போதனா வைத்திய சாலையில் சட்ட வைத்திய அதிகாரியினால் உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில் இளைஞரின் இறப்பிற்கான தெளிவான காரணம் குறிப்பிடப்படாமல் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. உடல்உறுப்பு மாதிரிகள் மேலதிக பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பப்பட உள்ளதாக உறவினர்களிடம் தெரிவிக்கப்பட்டது.




JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான
பூரண வசதிகளுடனான
பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical
University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384


உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள்
ஆரம்பம்
20.04.2025
கற்கும் போதே
தொழில் ஆற்றக்
கூடிய வாய்ப்பு
●CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
●NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDr
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர் Kalaikkathir

# கண்டி எசல மகா பெரஹெர முடிந்தது அரசுத் தலைவரிடம் ஓலை சமர்ப்பிப்பு

கண்டியில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க ஸ்ரீ தலதா மாளிகை மற்றும் நான்கு மகா தேவாலயங்களில் ஆண்டுதோறும் நடைபெறும் எசல மகா பெரஹெர, பண்டைய சடங்குகளுக்கு முக்கியத்துவம் அளித்து சிறப்பான முறையில் நிறைவடைந்ததாக தெரியப்படுத்தும் ஆவணத்தை, தியவடன நிலமே பிரதீப் நிலங்க தேல சனிக்கிழமை (09) மாலை கண்டியில் உள்ள அரசுத் தலைவர் மாளிகையில் அரசுத் தலைவர் அநுகுமாரவிடம் வழங்கினார்.

ஊர்வலமாக அரசுத் தலைவர் மாளிகைக்கு வருகை தந்த தலதா மாளிகை தியவடன நிலமே பிரதீப் நிலங்க தேல உள்ளிட்ட நான்கு மகாதேவாலயங்கள் மற்றும் வெளியூர் தேவாலயங்களின் நிலமேகளுடன் இணைந்து, பாரம்பரியத்தின் படி அரசுத் தலைவரிடம் அந்த ஆவணத்தைக் கையளித்தனர்.

இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில் அரசுத் தலைவர் மாளிகை வளாகத்தில் அரசுத் தலைவர் மரக்கன்றொன்றை நட்டார்.

இதனைத் தொடர்ந்து, அரசுத் தலைவர் யும் நிலமேக்களும் நீண்டகால பாரம்பரியத்தின்படி குழு புகைப்படம் பிடிக்கும் நிகழ்வில் இணைந்தனர். பெரஹெராவில் பங்கேற்ற கலைஞர்களுக்கு அரசுத் தலைவர் பரிசுகளையும் விருதுகளையும் வழங்கி வைத்தார்.

வெளிதேவாலாயங்களுக்கு எசல பெரஹெரா நிதியத்தினால் வழங்கப்பட்ட நிதி உதவியையும் அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவின் கரங்களினால் வழங்கிவைக்கப்பட்டதோடு மத்திய மாகாண கலாச்சார அமைச்சினால் தொகுக்கப்பட்ட 'புனித தலதா கலாச்சாரம்' என்ற நூலின் 20 ஆவது தொகுதி அரசுத் தலைவர் க்கு வழங்கப்பட்டது.

இலங்கை மக்கள் பௌத்த கலாசாரத்துடன் கட்டமைக்கப்பட்ட ஒரு சிறந்த பாரம்பரியத்தைக் கொண்டுள்ளனர். அதை கைவிட முடியாது, அதைப் பாதுகாத்து வளர்க்க வேண்டும் என்று அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க சுட்டிக்காட்டினார். அந்த பாரம்பரியத்தில் மிக முக்கியமான நிகழ்வாக ஸ்ரீ தலதா கலாச்சாரம் கருதப்படுகிறது என்றும் கூறினார்.

உலகிற்கு வெற்றிகளைக் கொண்டு வந்த இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட புதிய மாற்றத்தை நாடென்ற வகையில் நாம் உள்வாங்க முடிந்ததா என்று மீண்டும் நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும் என்றும், நமக்குப் பின்னால் இருந்த பல நாடுகள், இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அந்த நூற்றாண்டின் வெற்றிகளை தங்கள் சொந்த நாடுகளுக்கு விரைவாகப் பெற்றுத் தந்தன என்றும் அரசுத் தலைவர் சுட்டிக்காட்டினார்.

அதன்படி, உலகின் எதிர்காலத்தை கைப்பற்றவும், சில சமயங்களில் நமது வரலாற்று பாரம்பரியத்தைப் பாதுகாப்பதிலும் நாம் தோல்வியடைந்துள்ளோம். நமது தனித்துவமான எதிர்காலத்தையும் வளர்ச்சிப் பாதையையும் எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்ற சவால் மற்றும் கருத்தாடல் இன்று நம் முன் உள்ளது என்றும் அரசுத் தலைவர் சுட்டிக்காட்டினார்.

நமது தனித்துவமான பயணத்தைக் கண்டுபிடிப்பதிலும், நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதிலும், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் சாதனைகள் மற்றும் வரலாற்று பாரம்பரியத்தையும் உள்வாங்க வேண்டும் என்று அரசுத் தலைவர் சுட்டிக்காட்டினார்.

இந்த தலதா பெரஹெரா விழா ஒரு புதிய தேசத்தைக் கட்டியெழுப்புவதில் ஒரு மைல்கல் என்றும், அத்தகைய கலாச்சார விழா நாட்டின் எதிர்காலத்திற்கான ஒரு ஈர்ப்பாக பொதுமக்களிடம் கொண்டு செல்லப்பட வேண்டும் என்றும் அரசுத் தலைவர் கூறினார்.

'இந்த பெரஹெராவை கண்டுகளித்த போது, ஏராளமான இளைஞர்கள் மிகுந்த உற்சாகத்துடனும், ஆற்றலுடனும் ஊர்வலத்தில் பயணிப்பதைக் கண்டேன். இதைப் பார்ப்பது நமது நாட்டிற்கு ஒரு எதிர்காலம் இருக்கிறது என்பதில் மிகுந்த மகிழ்ச்சியையும் தைரியத்தையும் தருகிறது. அதே நேரத்தில், இளம் சிறுவர்களும் முதியவர்களும் மிகுந்த ஆற்றலுடன் நடனமாடுவதைக் கண்டேன்.

இந்தக் கலாச்சார நிகழ்வுகளுடன் இணைக்கப்பட்ட ஒரு தேசமாக நாம் தொடர்ந்து முன்னேற விரும்புகிறோம். அதற்காக, நமது வரலாற்று பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்துடன் பொது மக்கள் இயல்பாக இணைவதற்கும் படிப்பதற்கும் சூழலை உருவாக்குவோம்.'

நாட்டின் கலாச்சார மற்றும் வரலாற்று பாரம்பரியத்தைப் பாதுகாக்க ஒரு அரசியல் அதிகாரமாக வழங்கக்கூடிய மிக உச்ச ஆதரவு, தேவாலயங்கள்உள்ளிட்ட நிறுவனகட்டமைப்பிலிருந்து அரசியலை அகற்றி, அவற்றை வரலாற்றுப் பாதுகாவலர்களின் பாரம்பரியமாக மாற்றுவதாகும் என்று அரசுத் தலைவர் மேலும் கூறினார். இந்தக் கலாச்சார நடவடிக்கைகளுக்கும் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கும் அரசாங்கம் வழங்கும் நிதியுதவி தெளிவாக வேறுபடுத்தப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கண்டியில் ஆண்டு தோறும் நடைபெறும் எசல மகா பெரஹெராவை வெற்றிகரமாக நடத்துவதற்கு ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலை வழங்கிய மல்வத்த-அஸ்கிரிய மகா நாயக்க தேரர்கள் தலைமையிலான மகா சங்கத்தினருக்கும், பெரஹெராவிற்கு தங்களை அர்ப்பணித்த தியவடன நிலமே, நான்கு மகா தேவாலயங்களின் நிலமேக்கள் மற்றும் அதற்கு ஆதரவளித்த அனைவருக்கும் அரசுத் தலைவர் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

த்தசாசன, மத மற்றும் கலாச்சார விவகார அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி, மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் சரத் அபேகோன், அரசுத் தலைவர் யின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, கண்டி மாவட்ட செயலாளர் இந்திக உடவத்த மற்றும் அரசாங்க அதிகாரிகள், பாதுகாப்புப் படை பிரதிநிதிகள் உட்பட அழைக்கப்பட்ட விருந்தினர்கள் குழு இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.08.2025இல் வெளியிடப்பெற்றது